## இனிமையான குழந்தைகளே! ஞானத்தின் தாரணையுடன் கூடவே சத்யுக இராஜ்யத்தைப் பெறுவதற்காக நினைவு மற்றும் தூய்மையின் பலத்தையும் சேமியுங்கள்.

கேள்வி: இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுடைய (புருஷார்த்தம்) முயற்சியின் இலட்சியம் என்னவாக இருக்க வேண்டும்?

பதில்: எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பது, மிக மிக இனிமையாக இருப்பது, அனைவரையும் அன்புடன் நடத்துவது.. இதுவே உங்களுடைய புருஷார்த்தத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். இதன் மூலமாகவே நீங்கள் சர்வ குணங்களில் சம்பன்னமானவராக (நிறைந்தவராக) 16 கலை களில் (சம்பூர்ணம்) முழுமையானவராக ஆகி விடுவீர்கள்.

கேள்வி: யாருடைய செயல்கள் சிறந்தவையாக (சிரேஷ்டமானதாக) உள்ளனவோ, அவர்களுடைய அடையாளங்கள் என்னவாக இருக்கும்?

பதில்: அவர்கள் மூலமாக யாருக்குமே துக்கம் ஏற்படாது. எப்படி தந்தை துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவராக (துக்க ஹர்த்தா சுக கர்த்தா) இருக்கிறரோ அதே போல சிறந்த செயல்களைச் செய்பவர்கள் கூட துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர்களாக இருப்பார்கள்.

பாடல்: ஆகாய சிம்மாசனத்தை விட்டு இறங்கி வாருங்கள்!..

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான ஆன்மீக குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். இந்த இனிமையிலும் இனிமையான ஆன்மீகக் குழந்தைகள்" என்று கூறியது யார்? இரண்டு தந்தையரும் கூறினார்கள். நிராகார மானவரும் கூறினார், பின் சாகாரமானவரும் கூறினார். எனவே இவர்களுக்கு பாப் (தந்தை) மற்றும் தாதா (மூத்த சகோதரர்) - பாப்-தாதா என்று கூறப்படுகிறது. தாதா சாகாரமானவர் (உடல் உடையவர்) ஆவார். இப்பொழுது இந்த பாடலோ பக்தி மார்க்கத் தினுடையது ஆகும். தந்தை வந்துள்ளார். மேலும் தந்தை முழு சிருஷ்டி சக்கரத்தின் ஞானத்தை புத்தியில் பதிய வைத்துள்ளார் என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். நாம் 84 பிறவிகள் முடித்துள்ளோம். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது என்பது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியிலும் உள்ளது. இப்பொழுது நாம் யோகம் அல்லது நினைவினால் பாவனம் (தூய்மை) ஆக வேண்டும். நினைவு மற்றும் (நாலேஜ்) ஞானம் - இதுவோ ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளது. (பேரிஸ்டர்) வழக்கறிஞரை அவசியம் நினைவு செய்வார்கள். மேலும் அவரிடமிருந்து (நாலேஜ்) ஞானம் பெறுவார்கள். இதற்குக் கூட யோகம் மற்றும் (நாலேஜ்) ஞான பலம் என்று கூறப்படுகிறது. இங்கோ இது புது விஷயம் ஆகும். அந்த யோகம் மற்றும் ஞானத்தினால் எல்லைக்குட்பட்ட பலம் கிடைக்கிறது. இங்கு இந்த யோகம் மற்றும் ஞானத்தினால் எல்லையில்லாத பலம் கிடைக்கிறது. ஏனெனில் சர்வ சக்திவான் அத்தாரிட்டி (அதிகாரம் உடையவர்) ஆவார். நான் ஞானக்கடலும் ஆவேன் என்று தந்தை கூறுகிறார். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது சிருஷ்டி சக்கரத்தை அறிந்துள்ளீர்கள். மூல வதனம், சூட்சும வதனம்.. எல்லாமே நினைவில் உள்ளது. தந்தையிடம் என்ன நாலேஜ் உள்ளதோ அதுவும் கிடைத்துள்ளது. எனவே ஞானத்தையும் தாரணை செய்ய வேண்டும். மேலும் இராஜ்யத்தை பெறுவதற்காக தந்தை குழந்தைகளுக்கு யோகம் மற்றும் தூய்மையையும்

கற்பிக்கிறார். நீங்கள் தூய்மையாகவும் ஆகிறீர்கள். தந்தையிடமிருந்து இராஜ்யத் தையும் பெறுகிறீர்கள். தந்தை தன்னை விடவும் அதிகமான பதவியை அளிக்கிறார். நீங்கள் 84 பிறவிகள் எடுத்து எடுத்து பதவியை இழந்து விடுகிறீர்கள். இந்த ஞானம் குழந்தைகளாகிய உங்களுக்கு இப்பொழுது கிடைத்துள்ளது. உயர்ந்ததிலும் உயர்ந்தவராக ஆவதற்கான ஞானம் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை மூலமாகக் கிடைக்கிறது. இப்பொழுது நாம் பாப்தாதாவின் வீட்டில் அமர்ந்திருப்பது போல இருக்கிறோம் என்பதை குழந்தைகள் அறிந்துள்ளீர்கள். இந்த தாதா (பிரம்மா) தாயும் ஆக இருக்கிறார். அந்த தந்தையோ தனியானவர் ஆவார். மற்றபடி இவர் தாயும் ஆவார். ஆனால் இந்த உடல் ஆணின் உடையாக இருக்கும் காரணத்தால் பின் தாய் நியமிக்கப் படுகிறார். இவரையும் தத்து எடுக்கப்படுகிறது.அவர் மூலமாக பிறகு படைப்பு ஆகி உள்ளது. படைப்பும் கூட தத்து எடுக்கப்பட்டது ஆகும். தந்தை ஆஸ்தி அளிப்பதற்காக குழந்தைகளை தத்து எடுக்கிறார். பிரம்மாவை கூட தத்து எடுத்துள்ளார். பிரவேசம் செய்வது அல்லது தத்து எடுப்பது விஷயம் ஒன்றே ஆகும். குழந்தைகள் வரிசைக்கிரமமாக முயற்சிக்கு ஏற்ப புரிந்து கொள்கிறார்கள் மற்றும் புரிய வைக்கவும் செய்கிறார்கள். நாங்கள் நமது பரமபிதா பரமாத்மாவின் ஸ்ரீமத் படி இந்த பாரதத்தை மீண்டும் சிறந்ததிலும் சிறந்ததாக ஆக்குகிறோம் என்பதையே அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும். ஆக தாங்களும் சிறந்தவர் ஆக வேண்டும். நாம் சிரேஷ்டமானவர்களாக (சிறந்தவர்களாக) ஆகி உள்ளோமோ என்று நம்மையே நாம் பார்க்க வேண்டும். எந்த ஒரு ப்ரஷ்டாச்சாரமான (இழிந்த) காரியம் செய்து யாருக்கும் துக்கம் ஒன்றும் கொடுப்பது இல்லையே? நானோ குழந்தைகளை சுகமுடையவர்களாக ஆக்குவதற்காக வந்துள்ளேன் என்று தந்தை கூறுகிறார். எனவே நீங்களும் அனைவருக்கும் சுகம் அளிக்க வேண்டும். தந்தை ஒரு பொழுதும் யாருக்கும் துக்கம் கொடுக்க முடியாது. அவரது பெயரே துக்க ஹர்த்தா சுக கர்த்தா (துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர்) என்பதாகும். மனம், சொல், செயல் மூலமாக நாம் யாருக்குமே துக்கம் ஒன்றும் கொடுப்பதில்லையே என்று குழந்தைகள் தங்களையே சோதித்துக் கொள்ள வேண்டும். சிவபாபா ஒரு பொழுதும் யாருக்கும் துக்கம் கொடுப்பதில்லை. நான் கல்ப கல்பமாக குழந்தை களாகிய உங்களுக்கு இந்த எல்லையில்லாத கதையை கூறுகிறேன் என்று தந்தை கூறுகிறார். நாம் நமது வீட்டிற்கு செல்வோம். பிறகு புது உலகத்தில் வருவோம் என்பது இப்பொழுது உங்களுடைய புத்தியில் உள்ளது. இப்பொழுதைய படிப்பிற்கேற்ப கடைசியில் நீங்கள் "டிரான்ஸ்ஃபர்" (மாற்றம்) ஆகி விடுவீர்கள். வீட்டிற்கு திரும்ப சென்ற பிறகு வரிசைக்கிரமமாக பாகம் ஏற்று நடிக்க வருவீர்கள். இது இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது என்ன புருஷார்த்தம் (முயற்சி) செய்வீர்களோ அதே புருஷார்த்தம் உங்களுடையது. கல்ப கல்பமாக நிரூபிக்கப்பட்டு விடும் என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். படைப்பவர் மற்றும் படைப்பின் முதல், இடை, கடை பற்றிய நாலேஜ் (ஞானம்) தந்தையைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்பதை முதல் முதலில் அனைவருடைய புத்தியிலும் பதிய வைக்க வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் பெயரையே இல்லாமல் செய்து விட்டார்கள். திரி மூர்த்தி என்ற பெயரோ உள்ளது. திரி மூர்த்தி பாதையும் உள்ளது "திரி மூர்த்தி ஹவுஸ்" என்றும் உள்ளது. பிரம்மா விஷ்ணு சங்கரருக்கு திரி மூர்த்தி என்று கூறப்படுகிறது. இந்த மூவரின் படைப்புக்கர்த்தாவான சிவபாபாவின் அடிப்படை பெயரையே இல்லாமல் செய்து விட்டுள்ளார்கள்.

உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா ஆவார். பிறகு இருப்பது திரிமூர்த்தி என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். தந்தையிடமிருந்து குழந்தைகளாகிய நாம் இந்த ஆஸ்தியைப் பெறுகிறோம். தந்தையின் நாலேஜ் (ஞானம்) மற்றும் ஆஸ்தி இந்த இரண்டும் நினைவில் இருந்தது என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தந்தையின் நினைவில் இருந்து பிறகு நீங்கள் எவரொருவருக்கும் ஞான அம்பினை எய்தீர்கள் என்றால் நல்ல தாக்கம் ஏற்படும். அதில் சக்தி வந்து கொண்டே செல்லும். நினைவு யாத்திரையினால் தான் சக்தி கிடைக்கிறது. இப்பொழுது சக்தி மறைந்து விட்டுள்ளது. ஏனெனில் ஆத்மா பதிதமானதாக (தூய்மையற்றதாக) தமோ பிரதானமாக ஆகி விட்டுள்ளது. இப்பொழுது நாம் தமோபிரதான நிலையிலிருந்து சதோ பிரதானமாக ஆக வேண்டும் என்ற முக்கியமான கவனம் கொள்ள வேண்டும். மன்மனாபவ என்பதன் பொருளும் இதுவே ஆகும். கீதை படிப்பவர்களிடம் மன்மனாபவ என்பதன் பொருள் என்ன என்று கேட்க வேண்டும். என்னை நினைவு செய்வதால் ஆஸ்தி கிடைக்கும் என்று கூறியது யார்? புது உலகத்தை ஸ்தாபனை செய்பவர் ஒன்றும் கிருஷ்ணரோ கிடையாது. அவர் இளவரசர் ஆவார். பிரம்மா மூலமாக ஸ்தாபனை என்றோ பாடப்பட்டுள்ளது. இப்பொழுது செய்பவரும் செய்விப்பவருமாக இருப்பவர் யார்?. அவருக்கு சர்வ வியாபி (எங்கும் நிறைந்தவர்) என்று கூறி விடுகிறார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கரன் ஆகிய எல்லோருக்குள்ளும் அவரே தான் இருக்கிறார் என்கிறார்கள். இப்பொழுது இதற்கு அஞ்ஞானம் (அறியாமை) என்று கூறப்படுகிறது. உங்களை 5 விகாரங்கள் என்ற இராவணன் எவ்வளவு அறிவிலியாக ஆக்கி விட்டுள்ளான் என்று தந்தை கூறுகிறார். உண்மையில் நாம் கூட முதலில் அவ்வாறு இருந்தோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஆம் முதலில் உத்தமத்திலும் உத்தமர்களாகக் கூட நாம் தான் இருந்தோம். பின்னால் கீழே விழுந்து மகான் பதிதர்களாக (தூய்மையற்றவர்களாக) ஆனோம். இராம் பகவான் (இராமர்) குரங்கு சேனையை எடுத்து கொண்டார் என்று சாஸ்திரங்களில் காண்பித் துள்ளார்கள். இதுவும் சரிதான். நாம் உண்மையில் குரங்கு போல இருந்தோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இது இருப்பதே (ப்ரஷ்டாச்சாரி) இழிந்த உலகமாக என்று இப்பொழுது உணர்வு வருகிறது. ஒருவரையொருவர் திட்டிக் கொண்டு முட்கள் போல குத்திக் கொண்டே இருக்கிறார் கள். இது இருப்பதே முட்களின் காடாக. அது மலர்களின் தோட்டம் ஆகும். காடு மிகவும் பெரியதாக இருக்கும். தோட்டம் (கார்டன்) மிகவும் சிறியதாக இருக்கும்! கார்டன் பெரியதாக இருப்பதில்லை. உண்மையில் இச்சமயம் இது மிக பெரிய முட்களின் காடு ஆகும் என்பதை குழந்தைகள் புரிந்துள்ளார்கள். சத்யுகத்தில் மலர்களின் தோட்டம் எவ்வளவு சிறியதாக இருக்கும்! இந்த விஷயங்களை குழந்தைகளாகிய உங்களிலும் கூட வரிசைக்கிரமமாக முயற்சிக்கேற்பவே புரிந்துள்ளீர்கள். யாரிடம் ஞானம் மற்றும் யோகம் இல்லையோ, சேவையில் மும்முரமாக இல்லையோ பின் உள்ளுக்குள் அந்த அளவு குஷி கூட இருப்பதில்லை. தானம் செய்வதால் மனிதர்களுக்கு குஷி உண்டாகிறது. இவர் முந்தைய பிறவியில் தானம் புண்ணியம் செய்துள்ளார். அதனால் நல்ல ஜென்மம் கிடைத்துள்ளது என்று புரிந்திருப்பார்கள். ஒருவர் பக்தராக இருக்கிறார் என்றால் பக்தர்களாகிய நாங்கள் நல்ல பக்தரின் வீட்டில் போய் ஜென்மம் எடுப்போம் என்று புரிந்திருப்பார்கள். நல்ல செயல்களின் பலன் கூட நல்லதாகக் கிடைக்கிறது. தந்தை அமர்ந்து கர்மம், அகர்மம், விகர்மம் இவற்றின்

இயக்கத்தைப் பற்றி குழந்தைகளுக்கு புரிய வைக்கிறார். உலகினர் இந்த விஷயங்களைப் பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இப்பொழுது இராவண இராஜ்யம் ஆன காரணத்தால் மனிதர்களின் கர்மங்கள் அனைத்தும் விகர்மங்களாக ஆகி விடுகின்றன. பதீதமாகவோ (தூய்மையற்றவர்) ஆகவே வேண்டி உள்ளது. அனைவருக்குள்ளும் 5 விகாரங்கள் பிரவேசம் ஆகி உள்ளது. தானம், புண்ணியங்கள் ஆகியவை செய்கிறார்கள் என்றாலும் கூட குறுகிய காலத்திற்கு அதனுடைய பலன் கிடைத்து விடுகிறது. பிறகும் பாவங்களோ செய்து கொண்டே தான் இருக்கிறார்கள். இராவண இராஜ்யத்தில் என்னவெல்லாம் கொடுக்கல் வாங்கல் ஆகிறதோ அவை பாவங்களினுடையதாகத் தான் இருக்கும். தேவதை களுக்கு முன்னால் எவ்வளவு தூய்மையுடன் போக் (படையல்) படைக்கிறார்கள். தூய்மையாக ஆகி வருகிறார்கள். ஆனால் ஒன்றுமே அறியாமல் உள்ளார்கள். எல்லை யில்லாத தந்தைக்குக் கூட எவ்வளவு நிந்தனை செய்து விட்டுள்ளார்கள்! இறைவன் சர்வ வியாவி ஆவார் (எங்கும் நிறைந்தவர்) சர்வ சக்திவான் ஆவார் என்பது நாம் அவருக்கு மகிமை செய்கிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இது அவர்களுடைய தவறான அபிப்ராயம் என்று தந்தை கூறுகிறார்.

உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஒருவர் ஆவார். நாம் அவரைத் தான் நினைவு செய்கிறோம் என்று நீங்கள் முதல் முதலில் தந்தையின் மகிமையை கூறுகிறீர்கள். இராஜயோகத்தின் (ஏம் - ஆப்ஜெக்ட்) இலட்சியம் குறிக்கோள் கூட முன்னால் உள்ளது. இந்த ராஜயோகம் தந்தை தான் கற்பிக்கிறார். கிருஷ்ணரை தந்தை என்று கூற மாட்டார்கள். அவரோ குழந்தை ஆவார். சிவனுக்கு பாபா (தந்தை) என்று கூறுவார்கள்.அவருக்கு தனக்கென்று உடல் கிடையாது. இது நான் கடனாக எடுக்கிறேன். எனவே இவருக்கு பாப்தாதா என்று கூறுகிறீர்கள். அவர் உயர்ந்ததிலும் உயர்ந்த நிராகார தந்தை ஆவார். படைப்பிற்கு படைப்பிடமிருந்து ஆஸ்தி கிடைக்க முடியாது. லௌகீக சம்பந்தத்தில் ஆண் குழந்தைகளுக்கு தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. பெண் குழந்தை களுக்கோ கிடைக்க முடியாது.

ஆத்மாக்களாகிய நீங்கள் என்னுடைய குழந்தைகள் ஆவீர்கள் என்று இப்பொழுது தந்தை புரிய வைத்துள்ளார். பிரஜாபிதா பிரம்மாவின் ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகள் ஆவீர்கள். பிரம்மாவிடமிருந்து ஆஸ்தி கிடைப்பதில்லை. தந்தையினுடையவராக ஆகும் பொழுதே ஆஸ்தி கிடைக்க முடியும். இந்த தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு நேரிடையாக அமர்ந்து புரிய வைக்கிறார். இவற்றினுடையது ஒன்றும் சாஸ்திரமோ உருவாக முடியாது. நீங்கள் எழுதுகிறீர்கள், புத்தகங்கள் (லிட்டரேச்சர்) அச்சிடுகிறீர்கள் என்றாலும் கூட பிறகும் ஆசிரியர் இல்லாமல் யாருமே புரிய வைக்க முடியாது. ஆசிரியர் இல்லாமல் புத்தகங்கள் மூலமாக யாருமே புரிந்து கொள்ள முடியாது. இப்பொழுது நீங்கள் ஆன்மீக ஆசிரியர்கள் ஆவீர்கள். தந்தை விதை ரூபமானவர் ஆவார். அவரிடம் முழு விருட்சத்தின் முதல், இடை, கடை பற்றிய நாலேஜ் (ஞானம்) உள்ளது. ஆசிரியர் ரூபத்தில் அமர்ந்து உங்களுக்குப் புரிய வைக்கிறார். நம்மை சுப்ரீம் (உயர்ந்த) தந்தை தனது குழந்தையாக ஆக்கி உள்ளார். அவரே நமக்கு ஆசிரியராக ஆகி படிப்பிக்கிறார் என்ற குஷி குழந்தைகளாகிய உங்களுக்கோ எப்பொழுதும் இருக்க வேண்டும். உண்மையான சத்குருவும் ஆவார். கூடவே அழைத்து செல்கிறார். அனைவருக்கும் சத்கதி அளிக்கும்

வள்ளல் (சத்கதி தாதா) ஒருவர் ஆவார். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை தான் வந்து பாரதத்திற்கு ஒவ்வொரு 5 ஆயிரம் வருடத்திற்கு பின்னர் ஆஸ்தி அளிக்கிறார். அவருக்கு சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள். உண்மையில் சிவனுடன் கூட திரிமூர்த்தி இருக்க வேண்டும். நீங்கள் திரிமூர்த்தி சிவஜெயந்தி கொண்டாடுகிறீர்கள். சிவஜெயந்தி மட்டும் கொண்டாடுவதால் எந்த ஒரு விஷயமும் நிரூபணம் ஆவதில்லை. தந்தை வருகிறார் மற்றும் பிரம்மாவின் ஜன்மம் ஆகிறது. குழந்தைகள் ஆனீர்கள், பிராமணர் ஆனீர்கள். மேலும் இலட்சியம் நோக்கம் (ஏம்-ஆப்ஜெக்ட்) முன்னால் நின்றுள்ளது. சுயம் தந்தை வந்து ஸ்தாபனை செய்கிறார். ஏம்-ஆப்ஜெக்ட் கூட முற்றிலும் தெளிவாக உள்ளது. கிருஷ்ணரின் பெயரை போட்டு விட்டதால் மட்டுமே முழு கீதையின் மகத்துவம் இல்லாமல் போய் விட்டது. இதுவும் நாடகத்தில் பொருந்தி உள்ளது. இந்த தவறு மீண்டும் ஆகத் தான் போகிறது. விளையாட்டே முழுவதும் ஞானம் மற்றும் பக்தியினுடையது ஆகும். செல்லமான குழந்தைகளே! சுக தாமம் மற்றும் சாந்தி தாமத்தை நினைவு செய்யுங்கள்! என்று தந்தை கூறுகிறார். அல்ஃப் (தந்தை) மற்றும் பே (ஆஸ்தி) எவ்வளவு சுலபமானது ஆகும்! மன் மனாபவ என்பதன் பொருள் என்ன என்று நீங்கள் யாரை வேண்டுமானாலும் கேளுங்கள். என்ன கூறுகிறார்கள் என்று பாருங்கள்! -பகவான் என்று யாருக்கு கூற வேண்டும் என்று கூறுங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஆவார் அல்லவா? அவரை சர்வவியாபி என்று கூறுவார்களா என்ன? அவரோ அனைவரின் தந்தை ஆவார். இப்பொழுது திரிமூர்த்தி சிவஜெயந்தி வருகிறது. நீங்கள் திரிமூர்த்தி சிவனின் படம் எடுத்து வர வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவன் ஆவார். பிறகு சூட்சுமவதனவாசி பிரம்மா, விஷ்ணு, சங்கரன் ஆவார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா ஆவார். அவர் பாரதத்தை சுவர்க்கமாக ஆக்குகிறார். அவருடைய ஜெயந்தியை நீங்கள் ஏன் கொண்டாடுவதில்லை? அவசியம் பாரதத்திற்கு ஆஸ்தி அளித்திருந்தார். அவருடைய இராஜ்யம் இருந்தது. இதிலோ உங்களுக்கு ஆரிய சமாஜத்தினர் கூட உதவி அளிப்பார்கள். ஏனெனில் அவர்களும் சிவனை ஏற்று கொள்கிறார்கள். நீங்கள் உங்களுடைய கொடி ஏற்றுங்கள். ஒரு பக்கம் திரிமூர்த்தி, கால சக்கரம் மறுபுறம் கல்ப விருட்சம். உண்மையில் உங்களுடைய கொடி இதுவாக இருக்க வேண்டும். அமைக்க முடியும் அல்லவா? எல்லோரும் பார்க்கும் வகையில் கொடி ஏற்றுங்கள். முழு விளக்கவுரை இதில் உள்ளது. கல்ப விருட்சம் மற்றும் நாடகம் (டிராமா) இதிலோ முற்றிலும் தெளிவாக உள்ளது. நமது தர்மம் மீண்டும் எப்பொழுது வரும் என்பது அனைவருக்கும் தெரிய வந்து விடும். தாங்களாகவே அவரவர் கணக்கிட்டுக் கொள்வார் கள். அனைவருக்கும் இந்த சக்கரம் மற்றும் விருட்சத்தின் மீது புரிய வைக்க வேண்டும். கிறிஸ்து எப்பொழுது வந்தார்? இந்தனை காலம் அந்த ஆத்மாக்கள் எங்கு இருக்கிறார்கள்? நிராகாரி உலகத்தில் இருப்பார்கள் என்று அவசியம் கூறுவார்கள். ஆத்மாக்களாகிய நாம் ரூபம் மாறி இங்கு வந்து சாகாரமானவர்களாக (உடல் உடையவர்களாக) ஆகிறோம். நீங்களும் ரூபம் மாறி சாகாரத் தில் வாருங்கள் என்று தந்தைக்கும் கூறுகிறார்கள் அல்லவா? வருவதோ இங்கு தானே வருவார்! சூட்சும வதனத்திலோ வரமாட்டார். எப்படி நாம் ரூபம் மாறி பார்ட் நடிக்கிறோம், அதே போல நீங்களும் வாருங்கள். மீண்டும் வந்து இராஜயோகம் கற்பியுங்கள். இராஜயோகம் இருப்பதே பாரதத்தை சுவர்க்கமாக ஆக்குவதற்காக. இதுவோ மிகவுமே சுலபமான விஷயங்கள் ஆகும். குழந்தைகளுக்கு ஆர்வம் வேண்டும். தாரணை செய்து மற்றவர்களுக்கு

செய்விக்க வேண்டும். அதற்காக கடிதப் போக்குவரத்து செய்ய வேண்டும். தந்தை வந்து பாரதத்தை சுவர்க்கமாக ஆக்குகிறார். உண்மையில் கிறிஸ்து வருவதற்கு 3 ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாக பாரதம் (பேரடைஸ்) சுவர்க்கமாக இருந்தது என்று கூறவும் செய்கிறார்கள். எனவே திரிமூர்த்தி சிவனின் படத்தை அனைவருக்கும் அனுப்பி விட வேண்டும். திரிமூர்த்தி சிவனின் (ஸ்டாம்ப்) தபால் முத்திரை தயாரிக்க வேண்டும். இந்த தபால் முத்திரை தயாரிப்பவர்களுடைய டிபார்ட்மெண்ட் (இலாக்கா) கூட இருக்கக்கூடும். டில்லியிலோ நிறைய எழுதப் படிக்க அறிந்தவர்கள் உள்ளார்கள். இந்தக் காரியத்தை அவர்களால் செய்ய முடியும். உங்களுடைய தலைநகரம் கூட டில்லியாகத் தான் இருக்க போகிறது. முதலில் டில்லியை பரிஸ்தான் (தேவர்கள் வாழும் இடம்) என்று கூறிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ "கப்ரிஸ்தான்" - சுடுகாடு ஆகும். எனவே இந்த எல்லா விஷயங்களும் குழந்தைகளின் புத்தியில் வர வேண்டும்.

இப்பொழுது நீங்கள் எப்பொழுதும் குஷியில் இருக்க வேண்டும். மிக மிக இனிமையானவர் ஆக வேண்டும். அனைவரையும் அன்புடன் நடத்த வேண்டும். சர்வகுண சம்பன்னமாக 16 கலை சம்பூர்ணமாக ஆவதற்கான புருஷார்த்தம் (முயற்சி) செய்ய வேண்டும். உங்களுடைய புருஷார்த் தத்தின் இலட்சியமே இது ஆகும். ஆனால் இதுவரை யாருமே ஆகவில்லை. இப்பொழுது உங்களுடைய முன்னேறும் கலை ஆகிக் கொண்டே போகிறது. மெல்ல மெல்ல ஏறுகிறீர்கள் அல்லவா? எனவே பாபா எல்லா வகையிலும் சிவஜெயந்தியின் பொழுது சேவை செய்வதற்கான குறிப்புக்கள் அளித்துக் கொண்டே இருக்கிறார். இவற்றின் மூலம் உண்மையில் இவர்களுடைய (நாலேஜ்) ஞானமோ பெரியது ஆகும் என்பதை மனிதர்கள் புரிந்து கொள்வார்கள். மனிதர்களுக்கு புரிய வைப்பதில் எவ்வளவு உழைப்பு பிடிக்கிறது! உழைப்பு இல்லாமல் இராஜதானி ஸ்தாபனை ஆகுமா என்ன? ஏறுகிறார்கள், விழுகிறார்கள் மீண்டும் ஏறுகிறார்கள். குழந்தைகளுக்குக் கூட ஏதாவதொரு புயல் வருகிறது. முக்கியமான அடிப்படை விஷயமே நினைவினுடையது ஆகும். நினைவினால் தான் சதோபிரதானமாக ஆக வேண்டும். ஞானமோ சுலபம் ஆகும். குழந்தைகள் இனிமையிலும் இனிமையானவர்களாக ஆக வேண்டும். (ஏம் ஆப்ஜெக்ட்) இலட்சியம் நோக்கமோ முன்னால் நின்றுள்ளது. இவர்கள் (இலட்சுமி நாராயணர்) எவ்வளவு இனிமையாக உள்ளார்கள்! இவர்களைப் பார்த்து எவ்வளவு குஷி ஆகிறது! மாணவர்களாகிய நம்முடைய ஏம் ஆப்ஜெக்ட் இது ஆகும். படிப்பிப்பவர் பகவான் ஆவார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தந்தை மூலமாக கிடைத்திருக்கும் நாலேஜ் (ஞானம்) மற்றும் ஆஸ்தியை நினைவில் கொண்டு எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஞானம் மற்றும் யோகம் இருக்கிறது என்றால் சேவையில் மும்முரமாக இருக்க வேண்டும்.

2. சுகதாமம் மற்றும் சாந்தி தாமத்தை நினைவு செய்ய வேண்டும். இந்த தேவதைகளைப் போல இனிமையானவர்கள் ஆக வேண்டும். அளவற்ற குஷியில் இருக்க வேண்டும். ஆன்மீக ஆசிரியர் ஆகி ஞானத்தை தானம் செய்ய வேண்டும்.

வரதானம் : தேகம், சம்மந்தம் வைபவங்கள் இந்த பந்தனங்களின்றி சுதந்திரமாக பாபாவிற்கு நிகராக கர்மாதீத நிலை அடைக !

யாரொருவர் தன்னை ஒரு கருவியென புரிந்து கட்டளையின் படி குடும்பத்தை நிர்வாகம் செய்து கொண்டே ஆன்மீக ரூபத்தில் மோகமின்றி செயல்படுவார்களோ அவர்கள் இப்போதே கிளம்பி வாருங்கள் என்று கட்டளை கிடைத்த உடனேயே புறப்பட்டு வந்து விடுவார்கள். விசில் ஊதிய உடனேயே யோசித்து நேரத்தை வீண் செய்யாதவர்களையே மோகத்தை வென்றவர் என்று கூற முடியும். எனவே தன்னையே சோதனை செய்யுங்கள். தேகம், சம்மந்தம், வைபங்களின் பந்தனங்கள் என்னை ஈர்க்காமல் உள்ளதா பந்தனம் உள்ள இடத்தில் தான் ஈர்ப்பு இருக்கும். ஆனால் சுதந்திரமாக இருப்பவர்கள் தந்தைக்கு நிகராக கர்மாதீத் நிலையின் அருகே இருப்பார்கள்.

சுலோகன்: அன்பு மற்றும் ஒத்துழைப்புடன் சக்தியின் வடிவமாக இருந்தால் இராஜாங்கத்தில் முதல் நம்பர் கிடைத்து விடும்.

தனது சக்தி வாய்ந்த மனோநிலை மூலம் ஒளி தரும் சேவை செய்க.

இப்போது எந்தளவிற்கு உடல், மனம், பொருள் நேரத்தால் சேவை செய்கின்றீர்களோ அவ்வாறே மனோ சக்தியால் சேவை செய்தால் குறைந்த நேரத்தில் வெற்றி அதிகம் கிடைக்கும். இப்போது தனக்காக செய்யும் முயற்சியில் சிறிது கடின உழைப்பு தேவைப்படுகிறது. தன்னுள் சுபாவத்தை மாற்றவோ குழுவில் வாழ்வதிலோ சேவையின் வெற்றியிலோ அவ்வப்போது ஏற்படும் குறை களைக் கண்டு ஏற்படும் மனமுடைதல் யாவும் முடிவுக்கு வந்து விடும்.